[1981] ஏப்ரல் 16

ஈரோடு பெருந்துறை வட்டங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கும் திட்டம்

* வினா எண் 756 திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) 'ஈரோடு' பெருந்துறை வட்டங்களில் புதிதாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு பால் விற்பனை இணையத்தின் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறன் தினசரி 70,000 லிட்டர் மட்டுமே, ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபி வட்டங்களில் உற்பத்தியாகும் பால் தினசரி சராசரி 75,000 லிட்டராகும். பால் உற்பத்தி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை விட அதிகமாக இருப்பதால் புதிய சங்கம் துவக்கும் கோரிக்கைகளை ஈரோடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தற்போது ஏற்பதில்லை.

திரு தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்டிருந்த போது பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பித்தவுடன் புதிதாக அனுமதிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்: இப்போது பால்பவுடர் தொழிற்சாலை வேலை செய்த பின்னும் அதற்குத் தடை இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே சொல்கிறபோது இடைத்தரகர்கள் பாலை வாங்கிக் கொள்ளையடிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது, ஆகவே அரசு அதைப் பரிசீலித்து மாற்று ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, ஈரோடு "கோபி வட்டாரங்களில் தற்போது கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் துவக்கப்படவில்லேயே தவிர இன்னும் இரண்டு மாதங்களில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் சித்தோடு பகுதியிலே பால் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை வருகிற நேரத்திலே அதன் கொள்திறன் $1\frac{1}{2}$ லட்சம் லிட்டராக இருக்கும். அருகிலே இருக்கிற சங்கராண்டம்பாளையம் சத்திய மங்கலம் ஆகிய இரண்டு ஊர்களிலும் 50 ஆயிரம் லிட்டர் பதனப்படுத்துகிற திறனுடைய நிலைமையும் வருகிற போது, ஆக மொத்தம் இரண்டும் சேர்த்து 2 லட்சம் லிட்டர் பால் பதனப்படுத்துகிற நிலைமை இரண்டு மாதங்களிலே ஈரோடு, பெருந்துறை ஆகிய வட்டாரங்களில் அப்போது ஏறத்தாழ 400 பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் துவங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த 400 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வருகிற போது 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் அதன் காரணமாக ஈரோடு, பெருந்துறை ஆகிய பகுதிகளிலே பலன் பெறுவார்கள்.